# RUDRA YAGNAM

# ருத்ர யக்ஞம்



SNASS
RELIGIOUS TRUST
THAPPALAMPULIYUR
SAMASHTI MAHAARUDHRAM-2023
13th & 14th May 2023

## SRI NITHYAKALYANI AMMAN SEVA SAMITHI RELIGIOUS TRUST

## (SNASS Religious Trust) Thappalampuliyur



# RUDRA YAGNA AND ITS GLORIES

## 1) INTRODUCTION:

Rudra Japam is a powerful Vedic mantra ritual in Hinduism that involves the repetition of the Rudra Mantra. Chanting this mantra is believed to have many benefits, including removing negative energy, achieving peace and prosperity, and fulfilling wishes.

Rudra Mantra is a part of Yajurveda. It is one of the most sacred and powerful mantras in Hinduism. Moreover, it is often chanted during auspicious occasions and festivals. Rudra Japa can be done individually or in groups and can be done at any time of the day. However, it is believed to be more effective in the early morning hours. Rudraksha mala (a string of prayer beads made from the seeds of the Rudraksha tree) is commonly used in the Rudra Japam ritual. The mala usually consists of 108 beads and is used to count the number of times, the mantra is chanted. Rudra Japam is often chanted while performing a Yaga or a Homam. It is believed to purify the environment and enhance the power of the mantra.

Before the Rudra Japam ritual, one must prepare by bathing and wearing Sacred Vasthiram. It is also recommended to offer a small pooja or prayer to Lord Shiva and seek his blessings before starting the mantra. During Rudra Japa, the Rudra Mantra is repeated several times with complete devotion and concentration. The mantra is chanted in a certain rhythm and tone. This is believed to improve its power and efficiency. Chanting this mantra means offering flowers, fruits, and other things to Lord Shiva as a symbol of devotion and surrender. Rudra Japam ritual is often performed for specific purposes like wealth, health, or success in personal or professional life. Chanting the Rudra Mantra with the right intention and devotion is believed to help one achieve their goals and overcome obstacles in life.

## 2) Rudram and Chamaka Mantra (Rudra Prachna and Chamaka Prachna)

Ancient Sages and Sadhus have compiled several unique practices and rules for meditating with Vedic mantras. One such highly potent and powerful mantra is Sri Rudram, found in the Taittiriya Compendium (Samhita) of Sri Krishna Yajur Veda. The fifth chapter, in the middle of the fourth canto, is the "Rudra Mantra'' (Rudra Prachnam). This fifth chapter is divided into eleven (11) paragraphs (Anuvakas). Sri Rudram is a collection of mantras praising the attributes and characteristics of Lord Shiva. Its placement in the middle of the Taitriya Samhita reflects the importance of Sri Rudram. Apart from that, there is a fundamental mantra amid Sri Rudram. That is **Panchakshara Mantra (Namah: Sivaya).** {Namah: Sivaya ca Sivadaraya ca (line in 8th anuvaga)} . So, Sri Rudram is a very sacred mantra.

This mantra is also known as "Namaka Prachnam" (Namakam) because of the many times the word "Namah:" is used in this mantra. And it is also known as "Chatarutriyam." It is believed that the recitation of Rudra Prachnam with devotion, brings immense joy to Lord Shiva. Sri Rudra Mantra is recited by everyone for self-purifying and developing spiritual knowledge and world's prosperity. The 7th chapter of the 4th canto of the Taittriya Samhita is called 'Chamaka Prachnam' (Chamakam). Traditionally in regular prayers, this mantra is recited along with the Rudra mantra and the Chamaka Mantra to achieve the desired effect {through the word 'Chame' (meaning Lord! Give me this)}. Chamaka Prachna also has 11 anuvakas. Ascetics can recite Rudra Prachna. But they do not recite Chamaka Prachna. Because they don't need anything.

## 3) Rudra Japam (Rudra Parayanam)

The Rudra Mantra should constantly be repeated in a specific manner along with the Chamaka Mantra to achieve maximum benefits and results. It should be said with a concentrated intonation

and accent. This is called Rudra Japam or Rudra Parayanam. ‘Rudra’ is a form of Lord Shiva, the invincible hero and the remover of all sins. Saivism says that Lord Shiva performs the following five actions. They are creation, preservation, destruction, concealment, and grace.

Each step is governed by specific forms of Lord Shiva. Lord Shiva has eleven forms, namely Mahadeva Rudra, Siva Rudra, Maha Rudra, Sankara Rudra, Nilohitha Rudra, Ishana Rudra, Vijaya Rudra, Bhima Rudra, Devadeva Rudra, Bhaodbhava Rudra, and Kapilasha or Adityamatka Rudra. All these make 11 (eleven) an essential number in Rudra Mantra and Rudra Parayana.

The glory of the Rudra Japa can be traced back to legends where it is stated that Sri Krishna Paramatma performed it. Although he was not required to perform it, he recited the Rudra Japa so everyone could be sanctified.

## 4) Levels and Procedures of Rudra Parayana

There are various levels in Rudra Parayana depending on how many times the Rudra Mantra is recited. Each level is more powerful than the one before it. They are as follows:

**Sri Rudram:-** Chanting the Rudra Mantra once (11 Anuvakas) and Chamaka Mantra once.

**Ekadasa Rudhram:** Chanting the Rudra Mantra 11 times along with One time of Chamaka Mantra in the prescribed manner (viz) After chanting the Rudra Mantra fully once, chant first anuvaka of Chamakam. Then chant Rudra Mantra second time fully, which is to be followed by second anuvaka of Chamakam. Similarly chant Rudhra Manthra, third time fully, which is again to be followed by third anuvaka of Chamakam. Thus Rudhra Manthra is to be chanted 11 times till we complete one time Chamaka Mantra fully (viz.11 anuvakas). (Usually one Vedic Pandit will chant this Ekadasa Rudhram once)

**Lagu Rudram:** Also Named Ekadasini Rudram: (11 Ekadasa Rudram), i.e., Chanting 121($11^2$) times Rudra Mantra with 11 times Chamaka Mantram (according to the pattern mentioned in Ekadasa Rudram). (Generally, one Ekadasa Rudra Japam is chanted by 11 Vedic Pandits in Gropu.)

**Maha Rudram:** (11 Lagu Rudrams), i.e., Chanting 1331($11^3$) times Rudra Mantra with 121 times Chamaka Mantram (according to the pattern recited in Ekadasa Rudram). To complete minimum 1331 times Rudram Mantram along with 121 time Chamaka Mantram the pattern of Japa chanting, day, and the number of Vedic Pandits may vary according to practical convenience.

**Ati Maha Rudram:** (11 Maharudrams), i.e., Chanting 14641 ($11^4$) times Rudra Mantra with 1331 times Chamaka mantra (according to the pattern mentioned in Ekadasa Rudram).

## 5) Rules to be observed during Rudra Prayanam

★ Chanting to be done by Vedic pandits who have traditionally learnt Veda Manthras.

★ Maintaining sanctity in the three karanas of mind, voice and body.

★ Maintaining body cleanliness by taking ritual bath, wearing Sacred Vasthiram Holy Vibhuti and Rudraksha etc.

★ Drinking Panchakavyam, prior to reciting Rudram increases physical cleanliness.

★ Duing chanting of Rudhra Japam repeatedly, in order to avoid the lethargy, inattention and sleepiness that ensues, Vedic scholars generally practice abstaining from food or taking light food like porridge while doing Rudra Japam.

★ It is very important to follow the prescribed swaram and pronunciation while performing Rudra Japam.

## 6) “Mahanyasam: A Recital to be done before Rudra Parayanam

While performing Rudra Yagna, it is very important to recite “Mahanyasam” (elaborate spiritual purification mantra) before performing Rudra Parayanam like Ekadasa Rudram, Lagu Rudram, Maha Rudram and Ati Maha Rudram. Instead “Lagunyasam” (a brief spiritual cleansing mantra) is recited while Sri Rudram is Chanted on special days like Pradosha time. Through this, the body, mind and soul etc. are purified. The purification done by Mahanyasam is only for a specific event and not for that day or for one’s lifetime.

**Mahanyasam:** Lord Shiva in various forms like Indra, Agni, Yama, Varuna etc. is touched on the various parts of the person doing Rudra Japa while chanting. By such an invitation, Lord Shiva gets grace and everyone feels that Lord Shiva is waking up on the occasion. Some parts of Rudram, Purushasuktam and Shivasankalpa mantras can also be found in this mantra.

“Anganyasam” (mantra by touching body parts like heart, head) and “Karanyasam” (mantra by touching fingers and palms of both hands) are the easiest way to be able to chant mantras. Mahanyasam is superior to them. This mantra takes Matruka - Bijakshara etc. to all the parts of the body and then they become the parts of Lord Shiva.

## 7) Rudhra Yagnam

When Rudhra Parayanam (any type) is performed with associated rituals such Rudhra Kalasa Pooja, Rudhra Homam and Rudhrabhishekam it is called Rudhra Yagnam. Such traditional activities increase the power of Rudra Parayana and thus increase the benefits of the performance. The incalculable benefits of Rudra Yagna are as follows:

- It reduces the malefic effects of planetary disorders and helps to bring happiness to the world and devotee’s family.
- Helps to give health, wealth and peace.
- Helps to remove all kinds of fear and stress.
- Helps to elevate spirituality. It helps to lead a good family and married life.

## Rudra Kalasa Pooja and Rudra Parayanam

Rudhra Kalasa Poojas are performed to Kumba/Kalasas containing Abhisheka Theertha, which is sanctified by Rudhra Parayanam. These Kalasas are auspiciously placed in a decorated pandal and decorated with flowers and garlands. Then Rudra Kalasa Pooja and Rudra Parayanam are performed according to the specifications. Thus the theertha in these kalasa is sanctified.

Rudra Kalasa Pooja is performed with powerful mantras like Trisati archana and pratakshina namaskaram etc. A wide variety of flowers and bilva leaves are used to make the event auspicious. The number of Kalasa kept for pooja varies according to traditional Pracpices. For major events like Maha Rudhram, Ati Maha Rudhram, 11 Kalasas are kept to represent the 11 forms of Lord Shiva. In some places 12 Kalasas are kept. An extra Kalasa is kept for Samba Parameswaran. The 12th Kalasa Theertha is also used for Abhishekam.

The Kalasa Pooja method also varies depending on the traditional practices. In some places (where Rudra Yagna is performed with lesser number of Vedic Pandits), 11(12) Kalasas are kept together in the same place to perform Pooja and Rudra Parayanam. In case of Rudra Yagna with 121 Vedic Pandits, the Kalasas are placed individually in an order. Pooja and Rudra Parayanam is performed for each Kalasa by one Gana (11 count) of Vedic Pandits. For smaller events like Ekadasa Rudram and Lagu Rudram, Pooja and Rudra Parayanam are performed with only two Kalasas (one for Swami Abhishekam and another one for Ambal Abhishekam). In some other places, even for bigger events like Maha Rudram, Pooja and Rudra Parayanam are performed with two Kalasas only. When chanting the 8th anuvakam in which the word Nama:shivaya occurs, it is customary to ring bells and perform Harathi to mark its importance.

## Rudrabhishekam

Chanting to be done by Vedic pandits who have traditionally learnt Veda Manthras. The first abhishekam is done at the end of every Ekadasa Rudra, with a Theertha containing various Draviyas

mentioned below, to achieve various benefits for devotees. The second abhishekam is performed by the vedic pandits through Rudra Japa and the theerthas sanctified by kalasa Poojas.

After the completion of Rudra Japam and Rudra Homam, Archakas traditionally carry the Kalasas containing the Consecrated Theerthas on their heads and bring them in a procession to Swami and Ambal Sannithanam and anoint Swami and Ambal with Abhisheka Mantras. Not only that, they will perform Prokshan to the devotees gathered with this Sacred kalasa theertha. Here are some of the abhisheka Dravyas used at the end of Ekadasa Rudrabhishekam and its benefits:

| | |
|---|---|
| Milk - Long life | Panchamritham - Wealth |
| Ghee - Moksha siddhi | Lemon fruit - Removal of fear of death |
| Curd - Good children | Sugar - Removal of enmity |
| Honey - Soft voice | Coconut water - Happiness |
| Rice flour - Debt relief | Rice - Majestic |
| Sugarcane juice - Physical health | Sandalwood - Lakshmi kadaksham |

## Rudra Homam

Rudra Homam is a pooja performed to Agni by invoking the Maha Rudra form, a form of the mighty Lord Shiva, to sanctify the spiritual constitution of man's antaratma and the rooted disorders etc. Rudra Homam, a part of Rudra Yagna, is performed druing last change of Rudra Parayana. For this, Agni is produced by chanting Mantras according to Principled method and using a tool called "Arani".

During Rudra Homam one tenth (1/10th) of Rudra Japam is done separately. At the end of Rudra Homam, with the help of Chamaka Mantram, a kind of nose-shaped wooden spatula called "Suruksuruvam", and with pure ghee, Homam is performed like an unbroken stream of ghee starting from the aforesaid spatula and touching the fire. This is called **"Vasortra".**

## Rudrabhishekam (Lagu Rudra Yagnam) at Thappalampuliyur

Traditionally in our Thappalampuliyur village, various families perform Lagu Rudra Abhishekam called Rudrabhishekam to Sri Vyagrapureeswarar and Sri Nityakalyani Amman with any auspicious Vaibhavas in mind or for any prayer.

SNASS also conducts annual "Samashti Rudrabhishekam" for the welfare of SNASS FAMILY and villagers.

Lagu Rudraparayanam is performed after Samashti Sankalpam, Mahanyasam etc. in this Vaibhava which is done with two Kalasas. At the end of each Ekadasa Rudra Parayanam, Swami and Ambal are offered various types of Draviya Abhishekam. Although 11 Pandits are specified, more Vedic Pandits will attend for greater benefit. After the Rudra Parayanam, Swami and Ambal are anointed with Abhishekam through each Kalasa Theertha. After Alankaram, Sahasranama Archanai and Harathi, offering of Prasadam will take place.

## Maha Rudra Yagnam at Thappalampuliyur

This is the first Maharudra Yagna as far as this generation knows at Thappalampuliyur. Here Pooja is performed with 12 Kalasas. That means 11 Kalasas are kept for the 11 forms of Lord Shiva and one more for Samba Parameswaran. Kalasa Poojas like Anugya, Vigneswara Pooja, Sankalpam, Mahanyasa Mantram, Trisati Archanai and Pradakshina Namaskaram are performed before the Rudra Parayanam. This will be followed by Maha Rudra Parayanam for two days. At end of Rudra Parayanam, on second day, Rudra Homam is performed by chanting Rudram 133 times. After the completion of Rudra Homam, 12 Kalasas are taken in a traditional procession to Swami and Ambal Sannadi by the Archakas and Abhishekam is performed by chanting Abhisheka Mantras. After this, there will be Alankaram, Naivedyam and Deeparathana. Then prasadam is offered to the devotees.

***...Sarvam Sivamayam...***

# ருத்ர யக்ஞம் மற்றும் அதன் மஹிமைகள்

## 1. முன்னுரை:

ருத்ர ஜபம் என்பது இந்து மதத்தில், ருத்ர மந்திரத்தை மீண்டும் மீண்டும் செய்வதை உள்ளடக்கிய ஒரு சக்திவாய்ந்த வேத மந்திர சடங்காகும். இந்த மந்திரத்தை உச்சரிப்பதால், எதிர்மறை ஆற்றல் நீக்கம், அமைதி மேலும் செழிப்பை அடைவது மற்றும் ஆசைகளை நிறைவேற்றுவது உள்ளிட்ட பல நன்மைகள் இருப்பதாக நம்பப்படுகிறது.

ருத்ர மந்திரம் யஜுர்வேதத்தின் ஒரு பகுதியாகும். இது இந்து மதத்தில் மிகவும் புனிதமான மற்றும் சக்திவாய்ந்த மந்திரங்களில் ஒன்றாகும். மேலும் இது மங்களகரமான சந்தர்ப்பங்கள் மற்றும் பண்டிகைகளின் போது அடிக்கடி உச்சரிக்கப்படுகிறது. ருத்ர ஜபம் தனித்தனியாகவோ அல்லது குழுவாகவோ செய்யப்படலாம்.

மேலும் இந்த ஜபம் நாளின் எந்த நேரத்திலும் செய்யப்படலாம். இருப்பினும் அதிகாலை நேரங்களில் இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று நம்பப்படுகிறது. ருத்ர ஜபம் சடங்கில் பொதுவாக ருத்ராக்ஷ மாலா (ருத்ராட்ச மரத்தின் விதைகளிலிருந்து தயாரிக்கப்பட்ட பிரார்த்தனை மணிகளின் சரம்) பயன்படுத்தப்படுகிறது. மாலா பொதுவாக 108 மணிகளைக் கொண்டுள்ளது. மந்திரத்தை எத்தனை முறை உச்சரிக்கப்படுகிறது என்பதைக் கணக்கிடப் பயன்படுகிறது. ருத்ர ஜபம் பெரும்பாலும் ஒரு யாகம் அல்லது ஒரு ஹோமம் செய்யும் பொழுது ஜபிக்கப்படுகிறது. இது சுற்றுச்சூழலை சுத்தப்படுத்துவதாகவும், மந்திரத்தின் சக்தியை மேம்படுத்துவதாகவும் நம்பப்படுகிறது.

ருத்ர ஜபம் சடங்கிற்கு முன், குளித்து, புனிதமான வஸ்திரங்கள் அணிந்து தன்னைத் தயார்படுத்திக் கொள்வது அவசியம். சிவபெருமானுக்கு ஒரு சிறிய பூஜை அல்லது பிரார்த்தனை செய்து, மந்திரத்தைத் தொடங்குவதற்கு முன் அவருடைய ஆசீர்வாதத்தைப் பெறவும் பரிந்துரைக்கப்படுகிறது. ருத்ர ஜபத்தின் போது, ருத்ர மந்திரம் முழு பக்தியுடனும் செறிவுடனும் பலமுறை திரும்பத் திரும்பச் சொல்லப்படுகிறது. மந்திரம் ஒரு குறிப்பிட்ட ஸ்வரம் மற்றும் உச்சரிப்போடு செல்லப்படுகிறது. இது அதன் சக்தி மற்றும் செயல்திறனை மேம்படுத்துவதாக நம்பப்படுகிறது. மந்திரத்தை உச்சரிப்பது, பக்தி மற்றும் சரணாகதியின் அடையாளமாக சிவபெருமானுக்கு மலர்கள், பழங்கள் மற்றும் பிற பொருட்களை சமர்ப்பிப்பதாகும்.

ருத்ர ஜபம் சடங்கு பெரும்பாலும் செல்வம், ஆரோக்கியம், தனிப்பட்ட அல்லது தொழில் வாழ்க்கையில் வெற்றி போன்ற குறிப்பிட்ட நோக்கங்களுக்காக செய்யப்படுகிறது. ருத்ர மந்திரத்தை சரியான எண்ணத்துடனும் பக்தியுடனும்

உச்சரிப்பதன் மூலம் ஒருவர் தங்கள் இலக்குகளை அடையவும், வாழ்க்கையில் தடைகளைக் கடக்கவும் உதவும் என்று நம்பப்படுகிறது.

**2. ருத்ரம் மற்றும் சமக மந்திரம் (ருத்ர ப்ரச்னம் மற்றும் சமக ப்ரச்னம்)**

பண்டைய முனிவர்கள் மற்றும் சாதுக்கள் வேத மந்திரங்களைக் கொண்டு தியானம் செய்யும் பற்பல விசேஷங்களையும், அனுஷ்டான விதிமுறைகளையும் தொகுத்திருக்கிறார்கள். அத்தகைய உயர் ஆற்றல் படைத்த சக்தி வாய்ந்த மந்திரத்தில் ஒன்றுதான் ஸ்ரீ கிருஷ்ணயஜூர் வேதத்தின் தைத்ரிய வேதத்தொகுபபில் (ஸம்ஹிதா) இருக்கும் ஸ்ரீ ருத்ரம் என்று அழைக்கப்படுகிறது.

இந்த வேதத்தொகுப்பு (ஸம்ஹிதா) 44 அத்தியாயங்களை (ப்ரஷ்னங்களை) கொண்ட ஏழு காண்டங்கள் கொண்டது. நான்காவது காண்டத்தின் நடுவிலிருக்கும் ஐந்தாவது அத்தியாயம் "**ருத்ர மந்திரம்**" **(ருத்ர ப்ரச்னம்)** ஆகும். இந்த ஐந்தாவது அத்தியாயம் பதினொன்று (11) பத்திகளாக (அனுவாகனங்கள்) பிரிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ ருத்ரம் சிவபெருமானின் பண்புகளையும் குணாதிசயங்களையும் புகழ்ந்து சொல்லும் ஒரு மந்திரம். தைத்ரிய ஸம்ஹிதத்தின் நடுபாதியில் அமைந்திருப்பது ஸ்ரீ ருத்ரத்தின் முக்கியத்துவத்தை பிரதிபலிக்கிறது. அதுமட்டுமின்றி ஸ்ரீ ருத்ரத்தின் மத்தியில் மிகமுக்கியத்துவம் வாய்ந்த மந்திரத்தைக் காணலாம். அதுவே **பஞ்சாக்ஷர மந்திரம் (நம:சிவாய).** {நம:சிவாய ச சிவதராய ச (8வது அனுவாகத்தில் வரும் வரி)}. எனவே ஸ்ரீ ருத்ரம் மிகவும் புனிதமான மந்திரமாகும். இந்த மந்திரத்தில் "நம:" என்ற வார்த்தை பல முறை உபயோகிப்பதால் இது "நமகப்ரச்னம்" (நமகம்) என்று கூட அழைக்கப்படுகிறது. மேலும் இது "**சதருத்ரீயம்**" என்றும் அழைக்கப்படுகிறது.

பக்தியுடன் ருத்ர ப்ரச்னத்தை திரும்பத் திரும்பச் சொல்வதால் சிவபெருமான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறார் என்று நம்பப்படுகிறது. தனது சுயதூய்மை மற்றும் ஆன்மீக அறிவு மேம்பாட்டுக்குமின்றி, தனது மற்றும் உலக க்ஷேமத்திற்காகவும் எல்லோராலும் ஸ்ரீ ருத்ர மந்திரம் பாராயணம் செய்யப்படுகிறது.

தைத்ரிய ஸம்ஹிதையின் 4வது காண்டத்தின் 7வது அத்தியாயத்திற்கு 'சமக ப்ரச்னம்' (சமகம்) என்று பெயர். பாரம்பர்யமாக வழக்கமான பிரார்த்தனைகளில், பொருட்பலன் அடையும் பொருட்டு {சமே என்ற வார்த்தையின் மூலம் (கடவுளே! எனக்கு இதை கொடு என்று அர்த்தம்)}, ருத்ர மந்திரத்துடன், சமக மந்திரத்தையும் சேர்த்து சொல்லப்படுகிறது. அத்தகைய பொருட்பலன் என்பது உண்ண உணவிலிருந்து தான் முக்தி அடைவது வரையிலாகும். சமக ப்ரச்னமும் 11 அனுவாகத்தை கொண்டது. ஸன்யாசிகள் ருத்ர ப்ரச்னத்தை பாராயணம் செய்யலாம். ஆனால் சமக ப்ரச்னத்தை பாராயணம் செய்வதில்லை. ஏனெனில் அவர்களுக்கு பொருட்பலன் ஏதும் தேவையில்லை.

### 3. ருத்ர ஜபம் (ருத்ர பாராயணம்)

அதிக பட்ச நன்மைகள் மற்றும் பலாபலன்களை அடைய, ருத்ர மந்திரத்தை எப்போதும் சமக மந்திரத்தோடு குறிப்பிட்ட முறையில் திரும்ப சொல்ல வேண்டும். தொகுக்களிக்கப்பட்ட ஸ்வரம் மற்றும் உச்சரிப்போடு சொல்ல வேண்டும். இதனை ருத்ர ஜபம் அல்லது ருத்ர பாராயணம் என்று சொல்வார்கள். ருத்ர என்பது வெல்லமுடியாத மாவீரனும் பாபவிநாசினியுமான சிவபெருமானின் ஒரு வடிவம். சிவபெருமான் கீழ்கண்ட ஐந்து செயல்களைச் செய்வதாக சைவ மதம் சொல்கிறது. அவைகள் ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல் மற்றும் அருளல் ஆகும். ஒவ்வொரு செயலும் சிவபெருமானின் குறிப்பிட்ட வடிவங்களால் நிர்வகிக்கப்படுகிறது.

சிவபெருமானுக்கு, மஹாதேவ ருத்ர, சிவ ருத்ர, மஹா ருத்ர, சங்கர ருத்ர, நீலோஹித ருத்ர, ஈஷான ருத்ர, விஜய ருத்ர, பீம ருத்ர, தேவதேவ ருத்ர, பவோத்பவ ருத்ர மற்றும் கபிலாஷ அல்லது ஆதித்யமட்க ருத்ர என்ற பதினோரு வடிவங்களுண்டு. இவைகளனைத்தும் எண்.11 (பதினொன்று) என்பதனை ருத்ர மந்திரம் மற்றும் ருத்ர பாராயணத்தில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த எண்ணாக அமைய செய்துள்ளது.

ருத்ர மந்திரத்தின் மஹிமைக்கு ஒரு உதாரணம் தேவையெனில், ஹரி வம்சத்தில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா ருத்ர ஜபம் செய்ததாக ஒரு குறிப்பு உள்ளது. அவருக்கு ருத்ர ஜபம் செய்ய வேண்டிய அவசியமில்லை என்றாலும், மக்கள் அனைவரும் க்ஷேமம் அடைய ருத்ர ஜபத்தை பாராயணம் செய்தார்.

### 4. ருத்ர பாராயணத்தின் நிலைகள் மற்றும் செயல் முறைகள்

ருத்ர மந்த்ரம் எவ்வளவு முறை பாராயணம் செய்யப்படுகிறது என்பதை பொருத்து, ருத்ர பராயணத்தில் பல்வேறு நிலைகள் உள்ளன. ஒவ்வொரு நிலையும், அதன் முன்றையதை விட அதிக சக்தி வாய்ந்ததாக இருப்பதாக கருதப்படுகிறது. அவைகள் பின்வருமாறு:

**ஸ்ரீ ருத்ரம்:-** ஒரு முறை (11 அனுவாகங்கள்) ருத்ர மந்த்ரம் மற்றும் ஒரு முறை சமக மந்த்ரம் ஜபித்தல்.

**ஏகாதச ருத்ரம்:-** 11 முறை ருத்ர மந்திரத்துடன் ஒரு முறை சமக மந்த்ரம் முறையாக கீழ்கண்ட தொகுப்பில் சொல்வது. அதாவது ஒரு முறை முழுமையாக ருத்ர மந்த்ரம் ஜபித்தவுடன், சமகத்தின் முதல் அனுவாகத்தை ஜபித்தல். பிறகு இரண்டாவது முறை முழுமையாக ருத்ர மந்த்ரம் ஜபித்தவுடன் சமகத்தின் இரண்டாவது அனுவாகம் ஜபித்தல். அதேபோல் மூன்றாவது முறை முழுமையாக ருத்ர மந்த்ரம் சொல்லி பிறகு சமகத்தின் மூன்றாவது அனுவாகம் ஜபித்தல். இப்படியாக 11 முறை ருத்ர மந்திரம் மற்றும் ஒரு முறை சமக

மந்திரத்தை முழுவதுமாக ஜபித்து பாராயணத்தை முடித்தல். (பொதுவாக ஒரு வேத பண்டிதர் ஒரு முறை சொல்வார்).

**லகு ருத்ரம்:-** மறு பெயர் ஏகாதசினி ருத்ரம்: (11 ஏகாதச ருத்ரம்) அதாவது 121 ($11^2$) முறை ருத்ர மந்திரத்துடன் 11 முறை சமக மந்த்ரம் (ஏகாதச ருத்ரத்தில் சொல்லப்பட்ட முறைப்படி) ஜபித்தல். (பொதுவாக ஒரு நாளில், குழுவாக 11 வேத பண்டிதர்கள் கொண்டு ஒரு முறை ஏகாதச ருத்ர ஜபம் செய்யப்படும்)

**மஹா ருத்ரம்:-** (11 லகு ருத்ரம்) அல்லது 1331 ($11^3$) முறை ருத்ர மந்திரத்துடன் 121 முறை சமக மந்த்ரம் (ஏகாதச ருத்ரத்தில் சொல்லப்பட்ட முறைப்படி) ஜபித்தல். குறைந்த பக்ஷம் 1331 தடவை ஜபிக்க, நடைமுறை வசதிக்கேற்ப ஜப எண்ணிக்கை, நாள் மற்றும் வேத பண்டிதர்களின் எண்ணிக்கை மாறுபடலாம்.

**அதி மஹா ருத்ரம்:-** (11 மஹாருத்ரம்) 14641 ($11^4$) முறை ருத்ர மந்திரத்தோடு 1331 முறை சமக மந்த்ரம் (ஏகாதச ருத்ரத்தில் சொல்லப்பட்ட முறைப்படி) ஜபித்தல்.

**5. ருத்ர பாராயணம் செய்யும் போது அனுஷ்டிக்க வேண்டிய விதிமுறைகள்**

★ வேதங்களை முறைப்படி கற்று அறிந்து ஜபம் செய்யக்கூடியவர்களாக இருத்தல்.

★ மனம், வாக்கு மற்றும் உடல் ஆகிய மூன்று காரணங்களிலும் புனிதத்தன்மை பராமரித்தல்.

★ கிரமப்படி ஸ்னானம், வஸ்த்திரம், சுத்த விபூதி மற்றும் ருத்ராக்ஷம் முதலியவைகளால் உடற்சுத்தத்தைப் பராமரித்தல்.

★ ருத்ர பாராயணம் செய்வதற்கு முன் பஞ்சகவ்யம் அருந்துவது உடற்சுத்தத்தை அதிகரிக்கிறது.

★ பலமுறை ருத்ர ஜபம் செய்யும் போது வரும் உடற்சோம்பல், அலட்சியத்தன்மை, கவனக்குறைவு மற்றும் தூக்கம் வருவதைத் தவிர்க்க பொதுவாக வேத பண்டிதர்கள் ருத்ர ஜபம் செய்யும் வேளையில் உணவைத் தவிர்ப்பது அல்லது கஞ்சி போன்ற லேசான உணவை எடுத்துக் கொள்ளுவது பழக்கம்.

★ ருத்ர ஜபம் செய்யும்போது வகுக்கப்பட்ட ஸ்வரம் மற்றும் உச்சரிப்புகளைக் கடைப்பிடிப்பது மிக அவசியம்.

**6. "மஹான்யாஸம்"- ருத்ர பாராயணத்திற்கு முன் சொல்ல வேண்டிய மந்திரம்:**

ருத்ர யக்ஞம் செய்யும்போது, ஏகாதச ருத்ரம், லகு ருத்ரம், மகா ருத்ரம் மற்றும் அதி மகா ருத்ரம் போன்ற ருத்ர பாராயணம் செய்வதற்கு முன்னால்

**மஹான்யாஸம்** (விரிவான ஆன்மீக தூய்மைபடுத்தும் மந்திரம்) சொல்வது மிகவும் முக்கியம். மாறாக பிரதோஷ காலங்கள் போன்ற விசேஷ நாட்களில் ஸ்ரீ ருத்ரம் சொல்லும்போது **லகுன்யாஸம்** (சுருக்கமான ஆன்மீக தூய்மைபடுத்தும் மந்திரம்) சொல்லப்படுகிறது. இதன் மூலம் உடல், மனம் மற்றும் ஆன்மா முதலியவைகள் சுத்திகரிக்கப்படுகிறது. மஹான்யாஸத்தினால் செய்யப்படும் சுத்திகரிப்பு, குறிப்பிட்ட நிகழ்ச்சிக்கு மட்டுமே தவிர அந்த நாளுக்கோ அல்லது ஒருவருடைய வாழ்நாளுக்கோ இல்லை.

**மஹான்யாஸம்:** சிவபெருமானை இந்திர, அக்னி, யம, வருணன் போன்ற பல வடிவங்களில் ருத்ர ஜபம் செய்பவரின் பற்பல அங்கங்களில் வரவழைத்து ஜபிக்கும்போது தொடப்படுகிறது. இத்தகைய அழைப்பினால் சிவபெருமான் அருளைப்பெறுவதுடன், அந்நிகழ்ச்சியில் சிவபெருமான் எழுந்தருளிருக்கும் உணர்வையும் எல்லோருக்கும் ஏற்படுத்துகிறது. இந்த மந்திரத்தில் ருத்ரம், புருஷஸூக்தம் மற்றும் சிவஸங்கல்ப மந்திரங்களின் சில பகுதிகளையும் காணலாம். "அங்கன்யாஸம்" (ஹ்ருதயம், சிரஸூ போன்ற உடலின் அங்கங்களைத் தொட்டு சொல்லும் மந்த்ரம்) "கரன்யாஸம்" (இரண்டு கரங்களிலுமுள்ள விரல்கள் மற்றும் உள்ளங்கைகளை தொட்டு செல்லும் மந்த்ரம்) என்பவைதான் மந்த்ரங்கள் ஜபிக்கத் தகுதியாவதற்கு எளிமையான வழி. மஹான்யாஸம் அவைகளை விட மேலானது. இந்த மந்த்ரம் மாத்ருகா – பீஜாக்ஷரா முதலியவைகளை உடலின் எல்லா பாகங்களுக்கும் எடுத்துச் சென்று பிறகு அவைகள் சிவபெருமானின் பாகங்களாகவே ஆகின்றன.

**7. ருத்ர யக்ஞம்:**

ருத்ர கலச பூஜை, ருத்ர ஹோமம், ருத்திராபிஷேகம் போன்ற துணை நிகழ்ச்சிகளுடன் சேர்ந்து, ஏதேனும் ஒரு ருத்ர பாராயணம் செய்யும்போது அதனை ருத்ர யக்ஞம் என்றழைக்கின்றோம்.

இத்தகைய பாரம்பரிய காரியங்கள் ருத்ரபாராயணத்தின் சக்தியை அதிகப்படுத்தி அதனால் நிகழ்ச்சியின் பலாபலன்களை அதிகப்படுத்துகிறது. ருத்ர யக்ஞத்தின் கணக்கிலிடமுடியாத பலாபலன்கள் கீழ்வருமாறு:

- ✷ கிரகக்கோளாறுகளினால் ஏற்படும் தீவினைகளைக் குறைத்து உலகத்திற்கும் பக்தர்களின் குடும்பத்திற்கும் சந்தோஷத்தைக் கொடுக்க உதவுகிறது.
- ✷ ஆரோக்யம், செல்வம் மற்றும் அமைதி கொடுக்க உதவுகிறது.
- ✷ சகலவிதமான பயம் மற்றும் மனஅழுத்தத்தை நீக்குதலுக்கு உதவுகிறது.
- ✷ ஆன்மீகத்தை உயர்த்த உதவுகிறது.
- ✷ திருமணம் மற்றும் குடும்ப வாழ்க்கை நன்றாக அமைய உதவுகிறது.

## ருத்ர கலச பூஜை மற்றும் ருத்ர பாராயணம்

ருத்ர பாராயணத்தின் மூலம் புனிதமாக்க தேவையான அபிஷேக தீர்த்தத்தை கும்பம் அல்லது கலசங்களில் வைத்து அதற்கு ருத்ர கலசபூஜை செய்யப்படும். இந்த கலசங்கள் அலங்காரங்கள் செய்த பந்தலில் மங்களகரமான முறையில் வைத்து புஷ்பம் மற்றும் புஷ்ப மாலைகளால் அலங்கரிக்கப்படும். பிறகு ருத்ர கலச பூஜைகள் செய்யப்பட்டு ருத்ர பாராயணம் கிரமப்படி செய்யப்படும். இதனால் இந்த கலசங்களில் உள்ள தீர்த்தம் புனிதமாக்கப்படுகிறது.

ருத்ர கலச பூஜை என்பது திரிசதி அர்ச்சனை போன்ற சக்தி வாய்ந்த மந்திரங்களால் செய்யப்பட்டு ப்ரதக்ஷிண நமஸ்காரம் முதலியவைகள் நடத்தப்படும். இந்த நிகழ்ச்சியை மங்களகரமாகவும் சிறந்ததாகவும் செய்ய அதிகமான அளவில் பலவித பூக்கள் மற்றும் வில்வ தளங்கள் உபயோகிக்கப்படும். பூஜைக்கு வைக்கப்படும் கலசங்களின் எண்ணிக்கை பாரம்பரிய முறைகளுக்கேற்ப மாறுபடுகிறது. மஹாருத்ரம், அதி மஹாருத்ரம் போன்ற பெரிய நிகழ்ச்சிகளுக்கு 11 கலசங்கள் சிவபெருமானின் 11 வடிவங்களைப் பிரதிபலிக்கும் வகையில் வைக்கப்படுகின்றன. சில இடங்களில் 12 கலசங்கள் வைக்கப்படுகின்றன. அதிகப்படியான ஒரு கலசம் ஸாம்ப பரமேஸ்வரனுக்காக வைக்கப்படுகிறது. 12வது கலச தீர்த்தமும் அபிஷேகத்திற்கு உபயோகப்படுத்தப்படுகிறது.

கலச பூஜை முறையும் பாரம்பரியத்திற்கேற்ப சிறிது மாறுபடுகிறது. சில இடங்களில் (முக்கியமாக குறைந்த எண்ணிக்கை வேத பண்டிதர்களை வைத்து யக்ஞம் செய்யுமிடத்தில்) 11(12) கலசங்களும் ஒரே இடத்தில் வைத்து பூஜை பாராயணங்கள் செய்யப்படுகிறது. 121 வேத பண்டிதர்களை வைத்து யக்ஞம் செய்யும் பட்சத்தில் கலசங்கள் ஒழுங்கு முறையாக தனித்தனி இடத்தில் வைத்து பூஜை செய்யப்படுகிறது. ஒவ்வொரு கலசத்திற்கும் ஒரு கண (11 எண்ணிக்கை) வேத பண்டிதர்கள் அமர்ந்து பூஜை பாராயணங்கள் நடத்தப்படுகிறது. ஏகாதச ருத்ரம் மற்றும் லகு ருத்ரம் போன்ற சிறிய நிகழ்ச்சிகளுக்கு இரண்டு கலசங்கள் மட்டுமே வைத்து (ஒன்று ஸ்வாமி அபிஷேகம் மற்றொன்று அம்பாள் அபிஷேகம்) பூஜை பாராயணங்கள் நடத்தப்படுகின்றன. வேறு சில இடங்களில் மஹாருத்ரம் போன்ற பெரிய நிகழ்ச்சிகளுக்கு கூட இரண்டு கலச பூஜைகளே நடத்தப்படுகிறது. ருத்ர பாராயணம் செய்யும்போது, ருத்ர மந்திரத்தின் பஞ்சாக்ஷர மந்திரமான நம:சிவாய என்ற வார்த்தை வரும் 8வது அனுவாகம் ஜபிக்கும்போது, அதன் முக்கியத்துவத்தைக் குறிக்க மணியடித்து கற்பூர ஹாரத்தி செய்வது வழக்கம்.

## ருத்ராபிஷேகம்

ருத்ர யக்ஞத்தின்போது சிவபெருமான் மற்றும் அம்பிகைக்கு இரண்டு முறை ருத்ர அபிஷேகம் செய்யப்படுகிறது. முதல் முறை அபிஷேகம் ஒவ்வொரு

ஏகாதச ருத்ரத்தின் முடிவிலும், பக்தர்களின் பலவித பலன்களை அடைய கீழே சொல்லப்பட்ட பலவிதமான திரவியங்களை கொண்ட தீர்த்தத்தின் மூலம் அபிஷேகம் செய்யப்படும். இரண்டாவது முறை அபிஷேகம், வேத பண்டிதர்களால் ருத்ர ஜபம் மற்றும் கலச பூஜைகளின் மூலம் புனிதம் செய்யப்பட்ட தீர்த்தங்களின் மூலம் செய்யப்படுகிறது.

ருத்ர ஜபம் மற்றும் ருத்ர ஹோமம் முடிந்தபின், பூஜை செய்யப்பட்ட புனிதமான தீர்த்தங்களைக் கொண்ட கலசங்களை அர்ச்சகர்கள் பாரம்பரிய முறைப்படி தலையில் சுமந்து ஊர்வலமாக ஸ்வாமி மற்றும் அம்பாள் ஸந்நிதானத்திற்குக் கொண்டு வந்து ஸ்வாமி மற்றும் அம்பாளுக்கு அபிஷேக மந்திரங்களுடன் அபிஷேகம் செய்வார்கள். அது மட்டுமில்லாமல் இந்த புனிதமான கலச தீர்த்தத்தை கூடியிருக்கும் பக்தர்களுக்கு ப்ரோக்ஷணம் செய்வார்கள். ஒவ்வொரு ஏகாதச ருத்ராபிஷேகம் முடிவில் செய்யும் அபிஷேகத்திற்கு உபயோகிக்கும் சில திரவியங்கள் மற்றும் அதன் பலன்கள் இதோ:

| | |
|---|---|
| **பால் – நீண்ட ஆயுள்** | **பஞ்சாமிருதம் – செல்வம்** |
| **நெய் – மோக்ஷ சித்தி** | **எலுமிச்சை பழம் – மரண பயத்தை நீக்குதல்** |
| **தயிர் – நல்ல பிள்ளைகள்** | **சர்க்கரை – விரோதத்தை நீக்குதல்** |
| **தேன் – மென்மையான குரல்** | **இளநீர் – மகிழ்ச்சி** |
| அரிசி மாவு – கடன் தொல்லை நிவர்த்தி | **அன்னம் – கம்பீரம்** |
| **கரும்புச்சாறு – உடல் ஆரோக்யம்** | **சந்தனம் – லட்சுமி கடாக்ஷம்** |

## ருத்ர ஹோமம்

ருத்ர ஹோமம் என்பது சக்திவாய்ந்த சிவபெருமானின் ஒரு வடிவமான மஹா ருத்ர வடிவை அழைத்து, மனிதனின் அந்தராத்மாவின் ஆன்மீக அமைப்பு மற்றும் வேரூன்றி நிற்கும் கோளாறுகள் முதலியவைகளை புனிதப்படுத்த அக்னிக்கு செய்யப்படும் ஒரு பூஜையாகும். ருத்ர யக்ஞத்தின் ஒரு பகுதியான ருத்ர ஹோமம், ருத்ர பாராயணத்தின் கடைசி பகுதியில் செய்யப்படும். இதற்கு ஆசார முறைப்படி மந்திரங்கள் சொல்லி "அரணி" என்ற கருவியின் மூலம் அக்னி உற்பத்தி செய்யப்படுகிறது.

ருத்ர ஹோமத்தின்போது ருத்ர ஜபத்தில் பத்தில் ஒரு பங்கு (1/10) தனியாக ருத்ர ஜபம் செய்யப்படும். ருத்ர ஹோமம் முடிவில், சமக மந்திரத்தோடு, "சருக்சுருவாம்" என்று சொல்லப்படும் ஒருவித மூக்குவடிவ மர அகப்பை உதவிகொண்டு, மேற்சொன்ன அகப்பையில் ஆரம்பித்து அக்னியைத்தொடும் வரை அறுபடாத ஒரு தொடர் நெய் ஊற்று போல் சுத்த நெய் ஹோமம் செய்யப்படும். இதனை "**வஸோர்த்ரா**" என்று சொல்வார்கள்.

## தப்பளாம்புலியூரில் ருத்ராபிஷேகம் (லகு ருத்ர யக்ஞம்)

பாரம்பரியமாக நமது தப்பாளம்புலியூர் கிராமத்தில் பல்வேறு குடும்பங்களில், ஏதேனும் ஒரு நல்ல வைபவங்கள் மனதில் கொண்டோ அல்லது ஏதேனும் பிரார்த்தனை நிமித்தமோ, ஸ்ரீ வியாக்ரபுரீஸ்வரர் மற்றும் ஸ்ரீ நித்யகல்யாணி அம்மனுக்கு ருத்ராபிஷேகம் என்னும் லகு ருத்ர அபிஷேகம் நடத்துவார்கள். தற்போது SNASSம் அதன் குடும்பத்தினர்கள் மற்றும் கிராமவாசிகள் க்ஷேமத்திற்காக, வருடந்தோறும் "சமஷ்டி ருத்ராபிஷேகம்" நடத்துகிறது.

இரண்டு கலசங்கள் வைத்து செய்யப்படும் இந்த வைபவத்தில் சமஷ்டி ஸங்கல்பம், மஹான்யாஸம் முதலியவைகளுக்கு பிறகு லகு ருத்ரபாராயணம் செய்யப்படுகிறது. ஒவ்வொரு ஏகாதச ருத்ர பாராயண முடிவிலும் ஸ்வாமிக்கும் அம்பாளுக்கும் பலவித திரவிய அபிஷேகம் நடைபெறும். 11 பண்டிதர்கள் என்று நிர்ணயிக்கப்பட்டாலும், அதிக பலன்பொருட்டு அதிகப்படியான வேத பண்டிதர்கள் கலந்து கொள்வார்கள். ருத்ர பாராயணம் முடிந்தவுடன், ஸ்வாமி மற்றும் அம்பாளுக்காக ஒவ்வொரு கலச தீர்த்தத்தின் மூலம் அபிஷேக மந்திரத்துடன் அபிஷேகம் நடக்கும். அதன்பிறகு அலங்காரம், அலங்கார தீபம், ஸஹஸ்ரநாம அர்ச்சனை மற்றும் ஹாரத்தி, பிரஸாதம் வழங்குதல் முதலியவை கிரமப்படி நடந்தேறும்.

## தப்பளாம்புலியூரில் மஹாருத்ர யக்ஞம்

தப்பளாம்புலியூரில் இந்த சந்ததிக்கு தெரிந்தவரையில் இதுவே முதல் மஹாருத்ர யக்ஞம் ஆகும். இங்கு பொதுவான வழக்கத்திற்குப் பதிலாக 12 கலசம் வைத்து பூஜை செய்யப்படுகிறது. அதாவது 11 கலசம் சிவபெருமானின் 11 வடிவங்களுக்கும், ஒன்று அதிகப்படியாக ஸாம்ப பரமேஸ்வரனுக்கும் வைக்கப்படுகிறது. கிரமப்படி ருத்ர பாராயணத்துக்கு முன் அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜை, ஸங்கல்பம், மஹான்யாஸ மந்த்ரம், திரிசதி அர்ச்சனை போன்ற கலச பூஜைகள் மற்றும் ப்ரதக்ஷிண நமஸ்காரம் முதலியவைகள் நடைபெறும். இதன் பிறகு மஹா ருத்ர பாராயணம் (2 நாட்களில்) நடைபெறும். அதன் முடிவில் முறைப்படி 133 முறை ருத்ர பாராயணம் செய்து ருத்ரம் ஹோமம் செய்யப்படும்.

ருத்ர ஹோமம் முடிந்தவுடன், பாரம்பரிய முறைப்படி ஊர்வலமாக 12 கலசங்களும் அர்ச்சகரர்களால் ஸ்வாமி மற்றும் அம்பாள் சன்னதிக்கு எடுத்து செல்லப்பட்டு அபிஷேக மந்த்ரங்கள் சொல்லி அபிஷேகம் நடைபெறும். இதனையடுத்து கிரமப்படி அலங்காரம், நைவேத்யம், தீபாராதனை நடைபெறும். பிறகு வருகை தந்திருக்கும் பக்தர்களுக்குப் பிரசாதம் வழங்கப்படும்.

**...எல்லாம் சிவ மயம்...**

**Printing by: PSK Wedding Cards, Walajabad, Cell: 9176830350**

# FUNCTION PHOTOS













" Book released on the Occasion of
MahaRudra Yagnam at Sri Nithyakalyani Ambika Sametha
Sri Vyagrapureeswara Swamy Temple on 13th & 14th of May 2023".




**SNASS RELIGIOUS TRUST, THAPPALAMPULIYUR**

Apt.No.2, Raj Residency, 6/9, Seethammal Colony First Main Road, Alwarpet, Chennai - 600 018.

Phone: 98400 36514, 99401 36514 / 95510 66125. E-mail: snasstpuliyur@gmail.com